# பனியில் விளையும் தனியா!



கொத்தமல்லி இலை மற்றும் தனியா (மல்லி) இரண்டும் சமையலில் தவிர்க்க முடியாது அங்கங்கள். அதன் காரணமாகவே அவற்றுக்கு எப்போதுமே நிலையான சந்தை வாய்ப்பு இருக்கிறது. இதை மனதில் வைத்து, தர்மபுரி மாவட்டத்தில் சோகத்தூர், கடகத்தூர், பழைய தர்மபுரி, வெள்ளையக் கவுண்டம்பாளையம், குள்ளனூர் என பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மல்லி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கொண்டைக் கடலையோடு கூட்டுப் பயிராகவும் இதை சாகுபடி செய்து வருகின்றனர்.

இங்கே கொத்தமல்லி இலைகளுக்காக என்றில்லாமல், பெரும்பாலும் தனியாவை மனதில் வைத்துதான் இதைப் பயிரிடுகிறர்கள். மானாவாரிப் பயிராக, இயற்கை முறையில்தான் சாகுபடி நடக்கிறது. அந்த வகையில், 35 ஆண்டுகளாக தொடர்ந்து இந்த சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார், வெள்ளையக் கவுண்டம்பாளையம் கோவிந்தசாமி. அவரை சந்தித்தப்பொழுது எங்க பகுதியில் 60 வருடத்திற்க்கு மேல் கொத்தமல்லி சாகுபடி நடக்கிறது. கரிசல் பூமியில் பனிக்காலத்தில் கொத்தமல்லி நல்லா வரும் என்றதால், பனிக் காலம் ஆரம்பித்த உடனே கொத்தமல்லியை விதைத்து விட்டுடுவாங்க மூன்றே மாதத்தில் அறுவடை செய்து காசு பார்த்துவிடலாம். எனக்கு சொந்தமாக இரண்டு ஏக்கர் நிலம் இருக்கு. நான் வருடா வருடம் மானாவாரியாக உளுந்து விதைப்பேன். அதை அறுவடை செய்த கையோடு கொத்தமல்லியை விதைத்திடுவேன்.

கொத்தமல்லி 90 நாள் பயிர். ஐப்பசி மாதக் கடைசி வாரம் விதைப்புக்கு ஏற்ற காலம். தேர்வு செய்த நிலத்தை ஓர் உழவு செய்ய வேண்டம். பிறகு, 4 டிராக்டர் தொழுவுரத்தைக் கொட்டி இறைத்து நன்கு உழவு செய்ய வேண்டும். ஐப்பசி மாதம் மழை குறைந்த பிறகு விதைப்பது நல்லது. அதற்கு முன் விதைத்தால்,. ஈரப்பதத்தால் சாம்பிராணி நோய் தாக்க வாய்ப்பு உண்டு.

நிலம் தயாரான பிறகு, மாடு பூட்டி உழவு செய்து கொண்டே சோளம் விதைப்பது போல தூவி விதைக்க வேண்டும். இரண்டு ஏக்கருக்கு 40 கிலோ விதை தேவைப்படும்.

விதைத்த 11-ம் நாளில் முளைப்பு எடுக்கும். 30-ம் நாள் களை எடுக்க வேண்டும். 40-ம் நாளுக்கு மேல் பூவெடுத்து மலரத் தொடங்கும். 80-ம் நாளுக்கு மேல் அறுவடைக்குத் தயாராகி விடும். ஆரம்பததில் நிலத்தில் இடும் தொழுவுரம் மட்டும்தான். வேறு எந்த ஊட்டமும் கொடுக்கத் தேவையில்லை. தவிர, பனி மட்டும் தான் இதற்கு ஆதாரம். ஆனால், பூவெடுக்கும் சமயத்தில் அதிக பனி இருந்தால், பூக்கள் கருகி விளைச்சல் பாதிக்கும். விளைந்த மல்லிச் செடிகளை கைகளாலேயே அரித்து எடுத்து விடலாம். அறுவடை செய்த செடிகளின் மீது மாடுகளை மதிக்க விட்டு காய்களைப் பிரித்து எடுக்க வேண்டும். அவற்றை ஒரு நாள் முழுவதும் வெயிலில் காய வைத்து மூட்டை பிடித்துக் கொள்ளலாம். தொடர்ந்து மல்லி விதைக்க விரும்பினால்.. செடியிலேயே தேவையான அளவுக்குக் காய்களை முற்ற விட்டு விதைகளை எடுத்துக் கொள்ளலாம்.

இரண்டு ஏக்கர் நிலத்தில் பன்னிரண்டு மூட்டையிலிருந்து இருபது மூட்டை (60 கிலோ மூட்டை) வரை மல்லி கிடைக்கும். பனியால் விளைச்சல் பாதிக்காமல் இருந்தால், சராசரியாக பதினான்கு மூட்டைக்குக் குறையாமல் கிடைக்கும். போன வருடம் வரைக்கும் கிலோ 40 ரூபாய்க்குதான் விற்பனையாகிட்டிருந்தது. இப்போதைக்கு ஐம்பது ரூபாயிலிருந்து 70 ரூபாய் வரைக்கும் விற்பனையாகிறது. சராசரி விலையாக கிலோ 60 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலே பதினான்கு மூட்டைக்கு 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வருமானம் கிடைக்கும். செலவெல்லாம் போக 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கும்.

| 2 ஏக்கரில் கொத்தமல்லி சாகுபடி செய்ய கோவிந்தசாமி சொல்லும் செலவு – வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| உழவு | 1,500 | |
| தொழுவுரம் | 2,600 | |
| விதை | 2,000 | |
| விதைப்பு | 1,500 | |
| களையெடுக்க | 1,000 | |
| அறுவடை | 1,000 | |
| 840 கிலோ விற்பனை மூலம் வரவு | | 50,400 |
| மொத்தம் | 9,600 | 50,400 |

| | | |
|---|---|---|
| நிகரலாபம் | | 40,800 |

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.05.11 www.vikatan.com